# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு -2011 -2012

# வளர் தமிழ் 4

சுட்டெண்:.......................................................... நேரம்: 90 மணித்துளிகள்

**1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

1. தமிழில் உள்ள மெய் எழுத்துக்கள் ______________________
   (12, 18, 216)

2. தமிழின் முதல் இலக்கண நூல் ______________________
   (சிலப்பதிகாரம், தொல்காப்பியம், நன்னூல் )

3. பாலும் நீரும் கலந்து வைத்தால் பாலை மட்டும் குடிக்கும் பறவை
   ______________________ (குயில், கிளி, அன்னம் )

4. நாம் நண்பர்களிடம் குறை கண்டால் ______________________
   ( விலக்கிவிட வேண்டும், திருத்தவேண்டும், வெறுக்க வேண்டும் )

5. நாட்குறிப்பு என்பது ______________________ எழுதுவது.
   ( ஒவ்வொரு நாளும், மாதம் ஒருமுறை, வாரத்துக்கு ஒருமுறை )

6. இனிய நண்பனை ______________________ அறியலாம்
   (இடுக்கணிழ், இடுக்கணில், இடுக்கணிள்)

7. இயல் இசை நாடகம் என்பது ______________________பிரிவுகள்.
   ( தமிழின், கதையின், இசையின் )

8. தமிழில் உள்ள சிறந்த அறநூல் ________________.

( திருக்குறள், குண்டலகேசி, தொல்காப்பியம் )

9. தன்னைத்தான் விரும்புகிறவன் பிறருக்கு தீங்கு ________________.

( செய்வான், செய்யமாட்டான், செய்கிறான் )

10. நேற்று இலக்கியா தமிழ்ப் பள்ளிக்கு ________________.

( வருவாள், வந்தாள், வருகிறாள் )

11. இரவெல்லாம் பூங்காடு, பகலெல்லாம் வெறுங்காடு. அது ________________.

( உலகம், வானம், மலை )

12. முக்கனிகளில் ஒன்று ________________.

(தோடை, வாழை, கொய்யா.)

13. வடை ஒரு ________________ .

( சிற்றுண்டி, சிற்றுந்து, சிந்துந்து )

14. பள்ளிக்கு நேரம் ஆகிவிட்டதால் மாறன் ________________ச் சென்றான்.

( மெல்ல மெல்ல, ஆடி ஆடி, ஓடி ஓடி )

15. மக்கள் திரள் திரளாகத் திருவிழாவிற்குச் ________________.

( சென்றனர், போகின்றனர், வருகின்றனர் )

16. போர் முரசை ________________ என்றும் அழைப்பர்.

(கொடைமுரசு, படைமுரசு, மணமுரசு)

17. ஆடிப்பிறப்பன்று ________________ ஆடிக்கூழ் காய்ச்சுவர்.

( அதிகாலையில், மாலையில், இரவில் )

18. பெருக்குதல் என்ற சொல்லின் பொருள் ________________

( கழுவுதல், கூட்டுதல், துடைத்தல் )

19. நான் உனது நூலை ________________ திருப்பித் தர வேண்டும்?

( இப்பொழுது, எப்பொழுது, அப்பொழுது )

20. தோற் கருவிகளில் ஒன்று____________________ ஆகும்.

( புல்லாங்குழல், வீணை, பறை )

21. ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருப்பது

____________________

( கொக்கு, காகம், ஆந்தை )

22. சிறுமி ____________________ எனச் சிரித்தாள்.

( கலகல, சலசல, மளமள )

23. கங்காரு குட்டியைத் ____________________வயிற்றுப் பையில் காவிச் செல்லும்.

( உனது, எனது, தனது )

24. சிலப்பதிகாரத்தை எழுதியவர் ____________________

( இளங்கோவடிகள், சோமசுந்தரப் புலவர், ஔவையார் )

25. காட்டு அரசனாக வாழ்ந்த விலங்கு

____________________.

( முயல், கரடி, சிங்கம் )

26. பூனை எலியைப் ____________________ ஓடியது.

(பறக்க, பிடிக்க, எடுக்க )

27. மடல் என்பது ____________________ .

( அஞ்சல், நூல், கதை )

28. விழாக்கள் மூலம் நாம் ____________________ வளர்த்துக் கொள்ளலாம்.

( வேற்றுமையை, ஒற்றுமையை, பகைமையை )

29. ____________________ யானையைக் கண்ட குழந்தை அழுதது.

(முழங்குகிற, பிளிறுகிற, கனைக்கிற )

30. கைகளில் கோல்களை வைத்து ஆடுவது ____________________ஆகும்.

( மயிலாட்டம், கூத்தாட்டம், கோலாட்டம் )

(புள்ளிகள் 30)

2) **கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து பொருத்தமானதைத் தெரிந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| பெய்தது | வாத்தை | போக | மகிழ்ச்சியாக | தண்ணீர் |

மாறன் ஒரு வாத்து வளர்த்தான். வாத்து அதன் வீட்டிற்கு வெளியே இருந்த குளத்தில் நீந்தியது. நீண்ட நாட்களாக மழை பெய்யவில்லை. அதனால் குளத்தில் ________________ இல்லை. இதைக்கண்ட மாறன் குளியல் அறையில் ________________ நீந்த விட்டான். அன்று மழை ________________ குளத்தில் தண்ணீர் வந்து விட்டது. ஆனால் மாறனின் வாத்து குளத்துக்குப் ________________ மறுத்தது. அதனால் மாறன் குளத்துக்குப் போய்க் குளித்தான். வாத்து மாறனின் குளியலறையில் ________________ நீந்தியது.

(புள்ளிகள் 05)

3) **கீழே தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. திராவிட மொழிகளின் மூல மொழி யாது?

   ________________________________

2. கண்ணகி, கோவலன், மாதவியின் கதையைக் கூறும் நூல் எது?

   ________________________________

3. தோலினால் ஆன இசைக் கருவிகளை எப்படி அழைப்பர்?

   ________________________________

4. சிங்கம் முயல் மீது ஏன் சினங் கொண்டது?

   ________________________________

5. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

   இடுக்கண் ________________

   குருகு ________________

(புள்ளிகள் 10)

**4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| கடந்து | ஒவ்வொன்றும் | மெல்ல மெல்ல | ஓட்டமும்நடையுமாக | உனது |

1. பள்ளிக்கு நேரமாகி விட்டதால் சிறுமி ____________________ச் சென்றாள்.

2. வேலன் அக்கம் பக்கம் பார்த்து வீதியைக் ____________________ சென்றான்.

3. நான் எனது நூலை எடுக்கிறேன். நீ ________________ நூலை எடு.

4. முதியவர் ____________________ நடந்து சென்றார்.

5. இங்குள்ள பூக்கள் ____________________அழகானவை.

(புள்ளிகள் 05)

**5) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிடமொழியில் எழுதுக.**

நண்பர்கள் :- ______________________________

நாட்குறிப்பு:- ______________________________

கதிரவன்:- ______________________________

சிங்கம் :- ______________________________

மழை :- ______________________________

(புள்ளிகள் 05)

6) **தரப்பட்டிருக்கும் பகுதியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.**

28. 01.2012
சுவீடன்

அன்புத் தோழி அங்கவைக்கு
இங்கு நான் நலம் . நீ நலமாக இருக்கிறாயா? நீ கனடாவிற்குப் போன பின்னர் எழுதிய அஞ்சல் கிடைத்தது. நீ அங்கு தமிழ்ப்பள்ளியில் தமிழ் படிப்பதாக எழுதி இருந்தாய் எங்கள் தாய் மொழியான தமிழை நீ கற்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது. கனடாவில் நயாகரா நீர் வீழ்ச்சியைப் பார்த்ததாக எழுதியிருந்தாய். எனக்கும் அதைப்பார்க்க ஆசையாக இருக்கிறது. எதிர்வரும் கோடைகால விடுமுறைக்கு நாங்கள் கனடா வர இருக்கின்றோம். அப்பொழுது நாங்கள் சந்தித்துக் கொள்வோம். உன் தம்பி சேயோனையும் கேட்டதாகச் சொல்லவும்.

இப்படிக்கு
உன் தோழி
வெண்ணிலா

1. இக்கடிதம் யாரால் எழுதப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

2. அங்கவையின் தம்பியின் பெயர் என்ன?

_______________________________________________

_______________________________________________

3. வெண்ணிலாவின் தோழி எந்த நாட்டில் வாழ்கிறாள்?

_______________________________________________

_______________________________________________

4. கனடாவில் உள்ள நீர் வீழ்ச்சியின் பெயர் என்ன?

_______________________________________________

_______________________________________________

5. அங்கவை எங்கே தமிழ் படிக்கிறாள்?

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 10)

**7) கீறிடப்பட்ட இடங்களில் ஏற்ற சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. மாமாவும் மாமியும் நேற்று எங்கள் வீட்டிற்கு ______________________.
2. அப்பா நாளை புதிய சிற்றுந்து ______________________.
3. மாறனால் ஓவியம் ______________________.
4. நாம் ஒருவர் செய்த நன்றியை மறக்கக் ______________________.
5. காகம் ஒன்று மரத்தில் கூடு கட்டி வாழ்ந்து ______________________.

(புள்ளிகள் 10)

**8) தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.**

1. **நண்பன்:** ______________________
2. **உணவு :** ______________________
3. **நாடகம்:** ______________________
4. **வீணை:** ______________________
5. **சுற்றுலா:** ______________________

(புள்ளிகள் 10)

9) தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.




(புள்ளிகள் 15)